DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO. 104/2020**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.4

Defence

Court

| | |
|---|---|
| Name | : ராஜேந்திரன் |
| Father/ Husband Name | : மதலைக்கண்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

1, 3 மற்றும் 4 எதிரிகள் ஆஜர் . 2,5, மற்றும் 6வது எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 12.03.2024.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் கானாடுக்காத்தானில் குடியிருந்து வருகிறேன். கடந்த 06.03.2020ம் தேதி காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு, எனது நண்பரை பார்ப்பதற்காக சென்றேன். அப்போது அங்கு வார்டில் இருந்த 2வது எதிரி ராமநாதன் என்பவரை பார்த்தேன். அப்போது அவரிடம் என்ன விசயமாக இங்கு இருக்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு அவர் எனது மகன் 1வது எதிரியான கணேசன் என்பவருக்கு 2வது மனைவியின் மூலம் குழந்தை பிறந்திருப்பதாக சொன்னார். நான் மேற்படி கணேசனின் 2வது மனைவிக்கு பிறந்த குழந்தையை பார்த்துவிட்டு வந்தேன்.

2. அதன்பின்னர் 18.03.2020ம் தேதி புகார்தராரின் அப்பா கருப்பையா என்பவரை பார்த்தேன். அவரிடம் நான் காரைக்குடி அரசு

மருத்துவமனைக்கு சென்று நீலவேணி என்பவருக்கு குழந்தையை பார்த்துவிட்டு வந்தேன் என்று அவரிடம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சொன்னதால் குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.